## சுருக்கம்

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் – தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய ஆட்சி மன்றக் குழுவை திருத்தி அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜி2) துறை

அரசாணை (டி) எண். 735 நாள்: 27. 10. 2006

படிக்க:

1. அரசாணை (டி) எண். 999, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19.12.2000.
2. இயக்குநர், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், கடிதம் எண். எப்/2949/2000 நாள் 16.5.2001
3. இயக்குநர் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், கடித எண். எப்2/1881/2006 நாள் 9.6.2006.

*****

ஆணை:

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையமானது தொழிலாளர்கள் நிர்வாகப் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கட்கு பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்காக முதன் முதலாக 1973– ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. இக்கல்வி நிலையம் சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஓராண்டு பகுதிநேர தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டயப்படிப்பும் ( பி.ஜி.டி.எல்.ஏ) முழுநேரமாக இளங்கலை பட்டப்படிப்பும் அதாவது பி.ஏ. – (தொழிலாளர் மேலாண்மை) மற்றும் முதுநிலை பட்டப்படிப்பும், எம்.ஏ.– (தொழிலாளர் மேலாண்மை) நடத்தி வருகிறது. இந்தக் கல்வி நிலையம், முழுநேரம் மற்றும் பகுதி நேர முனைவர் ஆராய்ச்சி (பிஎச்.டி) நடத்துவதற்கு சென்னைப் பல்கலைக்கழகத்தால் ஒரு ஆராய்ச்சி நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 1987–ஆம் ஆண்டு வரை இந்நிறுவனமானது தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் ஒரு அங்கமாக செயல்பட்டு வந்தது. 1987–ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தன்னாட்சி நிறுவனமாக, சங்கப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இந்நிறுவனத்தில் நிர்வாக அலுவல்களை கவனிக்க ஆட்சி மன்றக் குழுவானது மாநில தொழிலாளர் நல அமைச்சரைத் தலைவராகவும், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தின் இயக்குநரை உறுப்பினர்– செலாளராகவும் கொண்டு அமைக்கப்பட்டது.

2) இந்நிறுவனத்தின் உபவிதி 11 (ii) –ன் படி ஆட்சிமன்றக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் 2 ஆண்டு காலம் குழுவில் அங்கம் வகிப்பர். ஆட்சி மன்றக் குழுவின் தலைவரான மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் 3 ஆண்டுகளுக்கு பதவியில் நீடிப்பார். அரசாணை எண்.1472, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 14.7.1987–ன் படி முதல் ஆட்சி மன்றக் குழு ஏற்படுத்தப்பட்டது . தற்போதுள்ள ஆட்சி மன்றக் குழுவானது அரசாணை (டி) எண். 999, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 19.12.2000–ன்படி திருத்தி அமைக்கப்பட்டது.

3). தற்போதுள்ள ஆட்சி மன்றக் குழுவின் 2 ஆண்டு பதவிக்காலம் 18.12.2002–ல் முடிவடைந்ததால் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய ஆட்சி மன்றக் குழுவை திருத்தி அமைக்குமாறு தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் பார்வை 2ல் படிக்கப்பட்ட கடிதத்தில் கோரி\யுள்ளார். தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநரின் கருத்துருவின்அடிப்படையிலும், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்திற்கான துணை விதிகளின் துணை விதி 9 மற்றும் துணை விதி 14–ன் படியும் , தொழிலாளர் கல்வி நிலைய ஆட்சி மன்றக் குழு கீழ்கண்டவாறு திருத்தி அமைக்கப்படுகிறது.

1. தலைவர் –மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்

2. துணைத் தலைவர் – செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.

<u>3. அரசு சார்பு உறுப்பினர்கள்:</u>

1. செயலாளர், உயர் கல்வித்துறை.
2. செயலாளர், நிதித்துறை அல்லது அவரது பிரதிநிதி.

<u>4. தொழில் முறை அமைப்பு சார்பு உறுப்பினர்கள் :</u>

1. செயலாளர்,
   தென்னிந்திய வேலை அளிப்போர் கூட்டமைப்பு,
   கருமுத்து செண்டர், 634 ,(பழைய எண். 498)
   அண்ணாசாலை,
   சென்னை–600 035.

2. திரு. டி. மணிபாரதி,
   குழு ஆலோசகர்,
   தொழில் மேம்பாடு,
   சுந்தரம் கிளைட்டன் நிறுவனம்,
   டி.வி.எஸ். ஜெயலஷ்மி எஸ்டேட்,
   ஹாடோஸ் சாலை,
   சென்னை –600 006.

<u>5. வர்த்தக அமைப்பு மற்றும் தொழிலாளர் பிரதிநிதி:</u>

1. தலைவர்,
   தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்,
   19–ஏ, ருக்மணி லட்சுமிபதி சாலை,
   எழும்பூர், சென்னை – 600 008.

2. துணைத் தலைவர்,
   தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை ( பிரதிநிதி) ,
   10 , தியாகராயா சாலை, வடக்கு உஸ்மான் சாலை, சென்னை–17.

6. கல்வி நிறுவனங்கள் சார்பு உறுப்பினர்:

1. துணை வேந்தர்,
   சென்னை பல்கலைக்கழகம்.

2. திரு. என். மனோகரன்,
   பேராசிரியர் , டாக்டர் அம்பேத்கார் சட்ட பல்கலைக்கழகம், சென்னை.

7. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய ஆசிரியர் தரப்பு:

1. முனைவர் கா. ஜெயராமன்,
   பேராசிரியர், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்,
   சென்னை – 600 005.

2. முனைவர் பொ. ஜெயந்தி,
   உதவி பேராசிரியை,
   தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்.
   சென்னை–600 005

8. வல்லுநர்கள்:

1. தொழிலாளர் ஆணையர், சென்னை –600 006
2. தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர்,
   சென்னை – 600 005.

9. உறுப்பினர் – செயலர்:

இயக்குநர் – தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்,
சென்னை–600 005

4. தொழிலாளர் கல்வி நிலைய துணை விதிகளின் ( Bye laws ) நகலை மேற்கண்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பிவைக்குமாறு தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் அறிவுறுத்தப்படுகின்றார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரமேஷ் குமார் கன்னா,
அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்,
சென்னை–600 005
தொழிலாளர் கல்வி நிலைய ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள்,
தமிழ்நாடு, தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர்,
சென்னை – 600 005. (வழியாக)

மாநிலக் கணக்காயர், சென்னை–600 018
மாநிலக் கணக்காயர், சென்னை–600 018 (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை–600 005
செயலாளர், உயர் கல்வித் துறை, சென்னை–600 009.
செயலாளர், நிதித் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர், சென்னை–600 005.
செயலரின் தனிச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு
துறை, சென்னை – 600 009.
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை–600 009 .
சுத்த நகல் / இருப்புக் கோப்பு

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.